# சண்முக தீபம்



இரத்தினத்தின் நினைவு வெளியீடு

22-08-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திருநாட்டின்
வடபகுதியில் அமைந்துள்ள
தெல்லிப்பழை – அம்பனையில்
மகாஜனக் கல்லூரிக்கு அருகில்
பிறந்து, வளர்ந்து
இறுதிக் காலத்தில் கனடாவில் வாழ்ந்து,
காலமான

கிளியண்ணை என அழைக்கப்பட்ட
திரு கிருஷ்ணர் சண்முகரத்தினத்தின்

நினைவாக

இந்த நினைவு மலர்

# சண்முக தீபம்

வெளியிடப்படுகிறது

**22-08-2010**

150 Braymore – BLVD
Scarborough
Ontario
M1B 2N5
Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மலர்வு 18-03-1940 உதிர்வு : 21 – 07 – 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

தோடுடைய செவியன் விடை
ஏறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி
பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரால் உனை
நான் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே.

- திருஞானசம்பந்தர்

## திருவாசகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பக்தி நெறி அறிவித்து பழ வினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

- கருவூர்த்தேவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடம் ஆகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
ஆச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

- அருணகிரிநாத சுவாமிகள்

## திருவெம்பாவை


ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள்தடங் கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புடண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே என் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

- மாணிக்கவாசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kiliannai with his wife and his children



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு கிருஷ்ணர் சண்முகரத்தினம்

| | |
|---|---|
| பிறப்பு: | 18.03.1940 |
| | |
| தந்தை | அம்பலவி கிருஷ்ணர் |
| தாய் | சின்னம்மா கிருஷ்ணர் |
| | |
| திருமணம் | 1978 |
| மனைவி | குலமணி (வல்விபுரம்) |
| பிள்ளைகள் | மோகனதாஸ் (கா.செ) |
| | சுரேந்திரதாஸ் |
| | |
| மாமன் | கதிர்காமர் வல்லிபுரம் |
| மாமி | எள்ளுப்பிள்ளை வல்லிபுரம் |
| | |
| சகோதரர் | சண்முகவல்லி இராசலிங்கம் |
| | கிருஷ்ணர் ஜெகதீசன் |
| | சறோஜினி கந்தசாமி |
| | |
| மைத்துனர் | வல்லிபுரம் ஆறுமுகசாமி |
| | குந்தாதேவி பாலசுப்பிரமணியம் |
| | வல்லிபுரம் திருநாவுக்கரசு |
| | வல்லிபுரம் சுந்தரேஸ்வரன் |
| | வல்லிபுரம் தர்மலிங்கம் |
| | பத்மாவதி நடராசா |
| | வல்லிபுரம் புவனேஸ்வரன் |
| | கதிரிப்பிள்ளை இராசலிங்கம் |
| | வத்சலாதேவி ஜெகதீசன் |
| | சின்னப்பு கந்தசாமி |
| | |
| இறப்பு | 21.07.2010 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

பாசமிகு என் அருமைமிகு கணவரைப் பறிகொடுத்து நானும் எனது மகனும் மீளாத்துயருறுகின்றோம். ஒரு குடும்பத்தில் கணவர் வகிக்கும் பங்கு பிரதான மானது. அப்பதவியை யாராலும் வகிக்கமுடியாது. நாம் திருமணமாகி 32 ஆண்டுகளாக வாழ்ந்த வாழ்க்கை நிர்மூலமாகிப் போய்விட்டதே இறைவா!

எமது மகனை இழந்து நான்கு வருடமாகு முன்னரே நீங்களும் என்னையும் இளைய மகனையும் விட்டுவிட்டு இவ்வளவு சீக்கிரம் பிரிந்து போவீர்கள் என்று நான் கனவிலும் காணவில்லையே!
அப்பா நீங்கள் மகனைப் பிரிந்து துயருற்ற வேளையில் நானும் உங்களுடன் பங்குகொண்டு கவலையைப் பகிர்ந்து கொண்டோம். இப்போ என்னையும் இளைய மகனையும் கவலை கொள்ள வைத்து விட்டு நீங்கள் சென்று விட்டீர்களே அப்பா! நாம் இன்று இருக்கும் நிலைக்கு நீங்கள் தானே காரணம் அப்பா! இத்தகைய தலைவனை இழந்து தவிக்கும் எமது குடும்பத்தில் இத்துயர் கலந்த வேளையில் தங்களது ஆத்மா இறைவனின் பாதார விந்தங்களை அடைந்து நித்திய வாழ்வை அடையும் வண்ணம் யாவும் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

எம்மைவிட்டு ஒளி விளக்கு மறைந்துவிட்டது. நீங்களும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வாழ்ந்த ஓர் ஒப்பற்ற தலைவனை இழந்து தவிக்கின்றோம். ஒப்பற்ற தலைவனாகிய நீங்கள் அருமை மகன், பாசம்மிக்க உறவினர்கள், பண்பான ஊர் மக்கள் யாவரையும், இழந்து மாறாத கவலைக்குள்ளாக்கி மறைந்து விட்டீர்களே அப்பா! நீங்கள் எங்கிருந்தாலும் சூக்கும உடலாய் எமக்கு வழிநடாத்திச் செல்ல வேண்டுமென்று மீண்டும் இறைவனை வேண்டுகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் விழிநீர்க் காணிக்கை

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த எமது தந்தையே! இன்று எம்மை விட்டுப் பிரிந்து விட்டீர்களே. நீங்கள் வாழும்பொழுதே அயராத உழைப்பு, விடாமுயற்சி போன்ற அணிகலன்களைக் கொண்டவராய் வாழ்ந்தீர்களே தந்தையே! உங்களால் இன்னும் எம்முடன் வாழ முடியவில்லையே தந்தையே! அண்ணா சென்ற வழியில் நீங்களும் அவரசமாய் போய்விட்டீர்களே. ஏனோ இறைவனும் தன்பால் அவசரமாய் அழைத்து விட்டான் எமது தந்தையை!

பிறந்தோர் யாவரும் இறப்பது உறுதி என்ற வாக்கிற்கிணங்க நீங்களும் எம்மை விட்டுப் பிரிந்து விட்டீர்களே தந்தையே! பெற்ற தந்தையை எந்த வார்த்தையாலும் வியந்து போற்ற முடியுமா? முடியாது. யாராலும் முடியாது. நீங்கள் எம்மை சீராட்டிப் பாலூட்டி, சோறூட்டி வளர்த்த தந்தையை மறக்க முடியுமா? தந்தையே நீங்கள் எம்மிடம் கொண்ட பாசத்தை மறக்க முடியுமா? எமது தந்தை எம்மிடம் செலுத்திய பாசம் சாதாரண வாழ்க்கையில் சில வேளைகளில் எமக்கு தெரியா விட்டாலும் இறந்துவிட்ட பின்பு எண்ணிப் பார்க்கும்போது அதனைவிட வேதனை இவ்வுலகில் வேறெதுவும் இருக்க முடியாது. பாசம் அத்தகையதெனில் இறப்பினால் ஏற்படும் கவலையும் அத்தகையதே.

தந்தையே! தங்களை இழந்து தவிக்கும் இத்துயர் கலந்த வேளையில் உங்களது ஆத்மா வறுத்தலை விநாயகன் பாதாரவிந்தங்களை அடைந்து நித்திய வாழ்வை அடையும் வண்ணம் வேண்டுகின்றேன்.

எனது ஒப்பற்ற தந்தையை இழந்து தவிக்கும் அம்மாவையும், என்னையும் நீங்கள் விண்ணிலிருந்து வழி நடாத்திச் செல்ல வேண்டுமென்று வேண்டுகின்றேன் அப்பா.

காயமே இது பொய்யடா! இது காற்றடித்த பையடா!

இவ்வண்ணம்
அன்புமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# May your soul rest in peace

***Hari & Abi***

I didn't really have much of a chance to spend time with you as much as i would have liked to. I often used to think of you after Sam, and always used to remember how skilled and excellent you were at driving. After my dad you were really someone i could look up to, and have always hoped to inherit your driving skills. I still hope one day i can be as good as you, but that is an extremely big place to fill, and i don't think that is possible, not by me, not by anyone.

I still remember when you came to visit us in 2008, you were always so interested in cars and car parts. You always asked me to take your to find car parts, and that is what we spent most of our holidays doing. I still remember you telling me that one thing you inherited from my granddad (your father) was his car number plate, EY 81 19. And now after you, i wish to inherit this number plate, and have it forever in your memory periappa.

In the little time i did have to spend with you, you were someone who i saw true love through, the way you cared for us, the way you spoke to us, the way you loved us, was truly only an emotion an uncle as brilliant as you could show us.

I often prayed for you when you were ill, and hoped and hoped that you will recover, and that everything will be back to normal. I always hoped that i would be able to see you, and now i know that i will never have that chance again. We still cant believe you have been taken from us, and we hope that you rest in peace where ever you are now, because you have truly lived a humble life, and was someone that i could, and i speak on behalf of the whole family here, someone that we could look up to and follow.

***You were taken from us to early..***

***May your soul rest in peace***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர்கள் புலம்பல்

உம்மையிங்கு காணாது உருகியாம் அழுகின்றோம்.
உங்களது செய்கைகளை எண்ணி நாம் ஏங்குகின்றோம்
ஏனையக்கு இந்தவிதி வந்தோன்றிச் சேர்ந்ததையா...!
இந்த நேரம் அருகிருக்க முடியவில்லை.
செம்மையாய் எம்பணி செய்யக் கிடக்கவில்லை.

இன்னல்கள் எத்தனையோ தொடர்ச்சியாக வந்தபோதும்
வாய்விட்டுச் சிரிப்போடு இன்பமாய் ஒளிந்தவரே!
எல்லோரும் கதறியழ காலனவன் பறித்தானோ கள்ளமில்லா உம் உயிரை?
எம் அன்பான தைத்துனரே!
பாசத்துடன் இருந்தீரே!

உம்மை நினைக்கும்போது உருகுது எம் நெஞ்சம்...
வாழ்வின் வழிகாட்டியாக...
குடும்பத்தின் விளக்காக...
கண்ணின் மணியாக...
எம் சகோதரியைக்கை பிடித்த மைத்துனரே...!

எம்குழந்தைகள் உம் வரவெதிர் பார்த்து
உறவாடக் காத்திருக்கையில்...
எல்லோரையும் விட்டு தனியாகச் சென்றதேனோ?
எம் குழந்தைகளுக்கு ஆறுதல் சொல்ல யார் வருவார்?
உம் அரிய ஒளிமுகத்தை இனி நாம்தான் காண்பதெப்போ...?

இறைவன் திருவடியைக் சேர்ந்து நீரும்.
பிரியமுடன் அவனடியில் வாழ்வீர்... வாழ்வீர்...

மாவைக் கந்தன் உற்சவ காலத்தில் இவ்வுலகை விட்டுச் சென்ற அன்னாரது ஆத்மா சாந்தியடைய மாவைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி நினைவுப் பூ

நீக்கமற நீங்கா நினைவுடன் நெஞ்சமெலாம் நிறைந்திருக்கும்.
ஏக்கமற்று துணைநின்ற தாங்குதூண், பலமிகுஉறுதுணை
கிளிமாமா.
தாக்கவலி தவிக்கவிட்டு தந்துவிட்டு சிவபதம் எய்திவிட்டீர்.
பக்கமின்றித்தவிக்கின்றோம் உமையிழந்ததினால் பரிதவிக்கின்றோம்.

அன்பாலும், பண்பாலும், பரிவாலும் எமையணைத்து
ஆசிதந்த குலவிளக்கே, ஒளிச்சுடரே எமை
இன்பத்தில் மூழ்கவைத்த அற்புதமே ஆருயிரே
அந்தியேட்டி நினைவுப் பூ சொரிகின்றோம் - இன்று
மாண்டுபோனீர் என்று நாம் நினைக்கவில்லை
மனையிலும், மனதிலும் மீண்டுள்ளீர்
சண்முகரத்தினம் மாமா, என்றுதான் இருக்கின்றோம்.
நின்நினைவுடனே அல்லும்பகலும் ஆண்டுதோறும்.

இறப்பின்செய்தி கேட்டபோதினிலே மறையவில்லை மாமா.
மடியிருத்தி வாஞ்சையுடன் தந்த அன்பெழுந்ததுவே.
ஆறாத்துயர் பகிர்கின்றோம். அரவணைத்த இதயம்
அகலவில்லை.
அன்பு செய்த மனங்கள் ஆறவில்லை.
நீறாக நெருப்பாக இறைவனடி போனாலும் போனவளி
நீங்காத நினைவுடனே நெஞ்சமெல்லாம்.
ஈறாகயில்லாத இதயமுடன் என்றென்றும் நிலையிருப்பீர்.
குன்றாத ஒளிவளிக்காய் குடியிருப்பீர்.

தெல்லிப்பளை அம்பனையில் கிருஸ்ணர்-சின்னம்மாவுக்கு உதித்த
ஜீவன்வல்லிபுரம் - குலமணியை கரம்பிடித்து இல்லறம் நடத்திய
புனிதன் நல்லறம் ஒளிர இருமணி மோகன் சுரேனை போன்றோரை
ஈன்ற மனிதன் வல்லவனுனை கனடா ரொரண்டோவில்
எமைப்பிரித்தானோ எடுத்தானோ காலனவன்.

அமரரின் ஆத்மாசாந்திக்காய் பிராத்திக்கும்.
மருமகள் ஆறுமுகசாமி வயலட் (திருமதி. சசிகரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Your Time to Go,
# Our Time to Remember

**_Jeneka Navaranjan_**

Kili Mama was a kind-hearted person who loved to put a smile on everyone's face. I understand that all his friends and family will miss him deeply, but that just shows how much they love him. In addition, when each person remembers their experiences with him, all they will be able to remember are the good times.

When Kili Mama was home from the hospital, he was kind enough to get a small gift for myself. No one had ever gotten a gift for me just for the thought of it; there always a reason, like birthday, graduation, or visit to a new home. Yes, he was that generous.

***No one will ever forget Killi Mama because***
***he was and always will be that unique.***

**************

# Miss You!

**_Nijaan Navaranjan_**

Killi Mama was so special to me. Every time he comes to my house, he brings chocolates and treats for my sister and me to eat. However, one little thing I do not like about him is he always smokes one cigarette when he comes and leave my house.

Now he can not come to our house, I miss him a lot!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## We miss you Monreal Mama!

It was very disheartening to hear the sad news about our uncle's death; it brought sorrow and grief into many lives. Our lives are filled with many experiences and memories that we share with our loved ones which bring happiness and glory into our lives. Experiences cannot be acquired or created, but one must simply undergo it to fully achieve those memories that we cherish forever. It is usually when we lose someone that meant so much to us that we realize what life would be like without them. Our uncle was a great human being who strived to make a difference in someone's life. He was a perfectionist at everything he did and always worked towards fulfilling things to the best of his ability. We share many unforgettable memories with him from our childhood to adolescent days and his loss has affected us all severely. We remember the days when he would come by with a huge bag of chocolate and the time he gave me (Tharmini) a pen when I first entered University. Our uncle was a kind and caring person who showed us a lot of love and affection. He greeted us with love and filled our stomachs till we were full. He will be remembered for his warm heart and hospitality.

To live in the hearts of those we love is never to die.
Death is the last chapter in time, but the first chapter in eternity.
The life of the dead is placed in the heart of the living.
If tears could build a stairway, and memories a lane,
We'd walk right up to heaven and bring you home again.
We will cherish all the great memories we had with you and you shall forever be in our hearts.
We will miss you but we know that you're in a better place now.

**Tharmini, Janani and Amaleny**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Peri Appa, Sleep Peacefully

*Janagan Sri Gengatharan (Jay)*

I sincerely apologise for not being able to be there with my family at this deeply difficult time. I am deeply saddened and upset at the passing of my Peri Appa. It seems like only yesterday that we were all flying to Canada for Mohan (Sam) Anna's funeral. I simply can not believe that this day has come.

I only found out in the last few hours of me writing this speech of Peri appa's passing. Peri appa was always one of my favourite uncle's, my other father if you like. Whenever he visited the UK, he always brought what he deemed as gifts for us all. He would bring mattress with funny designs for our bathroom and toilet or washroom as you may call it in Canada. He often brought things for our garden, which would make me laugh, though I would never do it to Peri appa's face. But his gentle manner with all the youngsters in our family, and his interest in Soccer and American movies made him one of my favourite members of the family.

Ever since I was young, Dad would tell me about how much he respected Peri appa, and the things that he had done for him when they were young. It made me feel an immense sense of respect from myself for him, even before I had met him at the age of 7.

Thinking back now I can remember occasions of when Peri appa would call home and speak to me about some of the big soccer matches that had just finished, and his disappointment or approval to the score. He always had an opinion on all aspects of sports, yet more which I had in common and loved about him.

It is not that well known amongst people, but back home Kili Annai was one of a handful of people, who were responsible for the first ever flood-lit soccer match in Jaffna. He was an electrical and mechanical fanatic, and was always in and out of one machine or another. The over whelming love and respect from the rest of our family, can not be put into words.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *My Peri Appa ...............*

Simply put, Peri appa was unique, an amazing person in life with new stories to interest and tell every day. A brave soul dealing with our brother's death only recently, and with his own health issues.

I so wish I was there for Peri Amma and Thas, but unfortunately due to restrictions I cannot. My love and thoughts as with the rest of our family are with both Peri Amma and Thas.

This part is specifically for Thas, please my brother forgive me for not being there, and be strong, for I promise you through these difficult times, you are not, and you will never be alone. Be there for Amma, and one day soon we will all be there together, but believe this I wish I was there right now to share the mourning. For as much as he was your Dad, he was all of ours.

A few moments before writing this speech, I clasped my hands together with tears streaming from my eyes, as they are at this moment in time... Please Lord, please... please make sure he is at peace and happy where ever he maybe now, and that he and Anna are together now in a better place.

***With all my love to you Kili Annai, My Peri Appa,***
***Sleep Peacefully.***

*Your ever loving Son*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுடைய பாசத்திற்குரிய அண்ணர் சண்முகரத்தினம்

*தம்பி மனோன் - நாகலிங்கம் சிறிகெங்காதரன்*

*அமரர் கிருஷ்ணர் சண்முகரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகள் கனடா- ரொற ன்ரோவில் 2010 யூலை மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வேவைளையில் வாசிக்கப்பட்ட இரங்கலுரை*

இலங்கைத் திருநாட்டின் தெல்லிப்பழை – அம்பனையில் பிறந்து தனது இளமைக் காலம் முழுவதையும் வாழ்ந்து அனுபவித்த என்னுடைய பாசத்துக்குரிய அண்ணரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள வந்திருக்கின்ற அனைவருக்கும் நன்றிகள். நான்கு ஆண்டுகளின் முன்பாகத்தான் இந்த இடத்தில் அண்ணரின் மூத்தமகனின் அகால மரணத்தின்போது நான் நேரில்வந்து அஞ்சலி உரையாற்றியிருந்தேன். இன்று நேரில் வரமுடியாத சூழ்நிலையில் இந்த செய்தியின்மூலம் என்னுடையதும் எங்களது குடும்பத்தினதும் அஞ்சலியை மிகுந்த மனச்சுமையுடன் செலுத்துகின்றேன்.

எங்கள் பெரியதான குடும்பத்தில் மூத்த ஆண் மகன் இவர். எல்லோராலும் கிளி அண்ணை என அன்பாக அழைக்கப்பட்டவர். சுமார் நூறு ஆண்டுகளிற்கு முன்பாக தெல்லிப்பழையில் மகாஜனக் கல்லூரிக்கு அருகில் மாதர் என்பவரின் மூன்று பெண்பிள்ளைகளான இலட்சுமி, மாரிமுத்து, அன்னப்பிள்ளை என்பவர்களின் பெரியதும் நீண்டதுமான வாரிசுகள் நாங்கள். இவர்கள் மூவருக்கும் 10 பிள்ளைகள். 36 பேரப்பிள்ளைகள். நூறுக்கு கிட்டவான பூட்டப்பிள்ளைகளும் அவர்களின் வாரிசுகளும். இவர்களில் அதிகமானவர்கள் ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்து நாட்டில் வசித்து வருகின்றார்கள். புலம் பெயர் மண்ணின் இயல்புகளினால் தொடர்புகளற்ற குடும்பச் சூழ்நிலகள் நிலவுகின்ற இந்தவேளையிலும் இவர்களிடம் தொடருகின்ற உறவுகளும் அன்பான சூழ்நிலையும் வியப்புக்குரியது. பெறுமதிமிக்கது. இன்றைக்கு தெல்லிப்பழையிலும் உலகம் முழுமையிலும் நூற்றாண்டை மிகக் குதூகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற மகாஜனக் கல்லூரியும் அதனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்களுடைய பாசத்திற்குரிய அண்ணர் .........*

தொடர்புள்ள நிறுவனங்களும் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்போர் இந்த தொடர்ந்த உறவுகளிற்கு முக்கியமான காரணங்கள். இந்தக் குடும்பம் முழுவதும் மகாஜனாவின் அருகில் வாழ்ந்து அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்துவருகின்றார்கள். இவர்களில் இருவர் இங்கிலாந்திலும் பிரான்சிலும் அதன் பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாக விழங்குகின்றார்கள். மகாஜனா என்கின்ற மந்திரச் சொல் இந்தக் குடும்பத்தின் அச்சாணியாக விழங்குவதை நன்றியோடு நினைவுகொள்ள விரும்புகின்றேன்.

அமரர் சண்முகரத்தினம் அவர்கள் தெல்லிப்பழையில் வான் - கார் உரிமையாளராக விழங்கிய கிட்டினம்மான் என அன்பாக அழைக்கப்பட்ட அம்பலவி கிருஷ்ணர் – சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகன். மங்களம் என அழைக்கப்படுகின்ற திருமதி சண்முகவல்லி இராஜலிங்கம், ஈசன் என அழைக்கப்படுகின்ற ஜெகதீசன், சறோ என அழைக்கப்படுன்ற திருமதி சறோஜினிதேவி கந்தசாமி ஆகியோரின் அண்ணனார். திருமதி குலமணிதேவியின் அன்புக் கணவர். காலம்சென்ற மோகனதாஸ், சுரேன் ஆகியோரின் பாசமிகு தந்தை. அன்பான கணவராகவும் ஆசை அப்பாவாகவும் தனது கடமையை செவ்வனே செய்தவர்.

என்னுடைய அம்மா, இரண்டரை ஆண்டுகளிற்கு முன்னதாக லண்டனில் காலமான திருமதி சிவகெங்கை நாகலிங்கம் இவருடைய தாயாரின் ஒன்றுவிட்ட தங்கை. இவருடைய சிறிய தாயார். இவருடைய அன்புக்கு முழுமையாகப் பாத்திரமானவர். அம்மா சுகயீனமான வேளையிலும் மரணமடைந்த வேளையிலும் மாதக்கணக்காக லண்டன் வந்து எங்களுடன் செலவுசெய்தவர். இந்த நினைவுகளை நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

அமரர் சண்முகரத்தினம் அவர்கள் தனது இளமைக்காலம் முதல் தமிழ் உணர்வுமிக்கவராக வாழ்ந்தவர். தனது தந்தையும் நெருங்கிய உறவினர்களும் சமசமாஜக் கட்சியினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் ஆதரவாளர்களாக இருந்தபோதிலும் தன்னுடைய ஆதரைவையும் தொடர்புகளையும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடனேயே வைத்திருந்தர்ர். மாணவராக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்களுடைய பாசத்திற்குரிய அண்ணர் .........*

அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவின் கொடும்பாவியை எரித்தமைக்காக தனது தந்தையால் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்ட சம்பவத்தை ஆறுவயதுச் சிறுவனாக நான் கண்டிருக்கின்றேன். காங்கேசன்துறைத்தொகுதியில் 1965இல் மகாஜனாவின் முன்னாள் ஆசிரியர் திரு சிறிபாஸ்கரன், திரு SJV செல்வநாயகத்திற்கு எதிராக தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட வேளையிலும் பின்னர் வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினராக விழங்கிய திரு தா திருநாவுக்கரசு அவர்கள் 1970இல் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட வேளையிலும் அவர்களுக்கு ஆதரவாகத் தீவிரமாக வேலைசெய்தார். நானும் அமரர் சண்முகரத்தினத்தின் தம்பியார் ஈசன் உட்பட எறத்தாள எல்லா உறவினர்களும் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் தோழர் V பொன்னம்பலத்திற்கு ஆதரவாக வேலைசெய்த போதிலும் தனது கொள்கையில் இருந்து விலகாமல் உறுதியாக இருந்தமையை நினைத்துப் பார்க்கின்றேன்.

1968இல் தெல்விப்பழையில் நானும் முன்னாள் வீரகேசரி, தினக்குரல் ஆசிரியர் சிவநேசச்செல்வன், இன்றைய கனடா மகாஜனாவின் செயலாளர் முத்துலிங்கம் ஆகியோர் அன்றைய எம் கிராமத்து இளைஞர்களுடன் இணைந்து தொடங்கிய அம்பனை – கலைப்பெருமன்றத்தின் செயற்குழுவில் தொடர்ந்து சேவையாற்றினார். சங்கம் தயாரித்து தங்கப் பதக்கங்கள் பெற்ற பல நாடகங்களில் நாட்டைவிட்டு வெளியேறும் வரையிலும் நடித்தார். கலைப்பெருமன்றம் 60 – 70 காலப்பகுதியில் செய்த கனதியான கலை-இலக்கியப் பணிகளில் இவரின் பங்களிப்பு காத்திரமானது. இதே காலப்பகுதியில் நானும் எனது நண்பர்களும் சேர்ந்து தொடக்கி தெல்லிப்பழையில் நடாத்திய சூட்டிங் ஸ்ரார் என்கினற விளையாட்டுக் கழகத்தின் சேவைகளிற்கும் வெற்றிகளிற்கும் பின்னால் இவர் இருந்தார். 1971இலும் 1972இலும் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தி பெருவெற்றி பெற்ற மின்னொளி உதைபந்தாட்ட நிகழ்வுகளிலும் இவரின் பங்களிப்பு கணிசமானது. அன்றைய காலகட்டடத்தில் அந்த மின்னொளி உதைபந்தாட்டமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்களுடைய பாசத்திற்குரிய அண்ணர் ..........*

கொழும்புக்கு வெளியே நடந்த முதலாவது மின்னொளி உதைபந்தாட்டடமாகும்.

மகாஜனக் கல்லூரியின் அதிர்ஷட்டக்கார வாகன □ட்டுனராக ஆசிரிர்களாலும் ஆதரவாளர்களாலும் கருதப்பட்டார். குறிப்பாக அன்றைய விளையாட்டு வீரர்களால் அப்படி ஆராதிக்கப்பட்டார். சரித்திரம் படைத்த மகாஜனாவின் வெற்றிகளின்போது வீரர்களை போட்டிகளிற்கு அழைத்துச்சென்றவர் இவர்தான். கனடாவில் மகாஜன பழைய மாணவர்சங்கத்தின் உற்சாகமான உறுப்பினராகச் செயற்பட்டவர்.

தனிப்பட்டமுறையில் கடந்த மே மாதத்துடன் முடிவுற்ற தமிழ்ப் போராட்டத்தின்போது என்னுடைய நீண்டகால அரசியல் சித்தாந்தத்தை ஒட்டிநின்று நான் செயற்பட்ட வேளைகளில் எல்லாம் என்னைத் தட்டித்தந்தவர். என்மீது நிறைந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தவர்.

இன்னமும் சில நிமிட வேளைகளில் அக்கினியுடன் சங்கமமாக உள்ள அண்ணரின் இனிய நினைவுகளை மனதில் இருத்தி கண்ணீருடன் கிளி அண்ணையே சென்று வா என விடைபெறுகின்றேன்.

***************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு பொ கனகசபாபதி அவர்கள் யூலை25ம் திகதி இறுதிச் சடங்கில் ஆற்றிய உரை

1987இன் பிற்பகுதி. மொன்றியாலில் வசித்து வந்த நான் மனைவியுடன் சாமி அப்பாத்துரை வீட்டினில் ஒரு விசேஷம் சம்பந்தமாகச் செல்வதற்காக ஜீன் ரலோன் தொடர்வண்டி நிலையத்தினை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறோம். ஒரு மிகவும் பரிச்சயமான குரல், ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியுடன் "சேர் நீங்களா" எனக் கூவியபடி ஓடி வந்து என்னை அரவணைக்கிறார். திகைத்து நின்ற என்மனைவியிடம் இவர் தான் சண்முகரத்தினம் தெரியாதோ என்கிறேன். தனக்கு, நாம் கனடா வந்தது தெரியாமல் போய்விட்டதே எனச் சொல்லி, தான் இதுவரை என்னைப் பார்க்காமல் இருந்தமைக்காக வருந்துகிறார். அவர் முகத்தில் கண்ட பரவசம், குரலில் தொனித்த மகிழ்ச்சி, செயல்கள் ஒவ்வொன்றிலும் கண்ட உணர்ச்சிப் பிரவாகம் அவர் என்மேல் காட்டிய அன்பினையும் பண்பினையும் எண்ணி ஆச்சரியப்படவைக்கிறது.

1976ஆம் ஆண்டு நான் மகாஜனாவின் அதிபராகத் தலைமை ஏற்கிறேன். நான் பாடசாலைக்கு அதிகாலையில் செல்லும் வழமையைக் கைப்பிடித்தவன். இரண்டொரு நாளின் பின் காலையில் நான் பாடசாலை சென்று எனது அலுவலகத்தில் உட்கார்ந்து இருக்கிறேன். திரு. சண்முகரத்தினம் மன்னிப்புக் கேட்டபடி என் அறையின் உள்ளே புகுகிறார். 'என்ன விசயம்' என்கிறேன். 'சேர் எங்களுக்குத் தயைகூர்ந்து ஒரு அனுமதி தர வேண்டும்' என்கிறார். 'அது தான் சொல்லுமேன்', பார்க்கலாம் என்றேன். 'சேர் எமது பாடசாலை உதை பந்தாட்டக் கோஷ்டி ரி.பி யின் பயிற்சியிலே மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. விளையாட்டு வீரர்களைப் போஷிப்பது பழையமாணவர்களாகிய எங்கள் கடன். ஆகவே தினசரி காலையில் பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கான போஷாக்கு மிக்க ஆகாரங்களைக் கொடுத்து வருகிறோம். இதனைத் தொடர்ந்து செய்வதற்கு பெரிய மனது வைத்து அனுமதிக்க வேண்டும்' என்றார். பாடசாலையின் கட்டுப்பாட்டிற்கு எத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறார் அதே சமயத்தில் எமது உதை பந்தாட்டக்குழுவினது செயற்பாடுகளில் எத்தனை ஆர்வம் காட்டுகிறார் என்பதை அறிந்து வியந்தேன். 'பாடசாலையினது நடைமுறை விதிகளுக்கு அமைய அதனைச் செய்யலாம்' என இயைந்தேன்.

1979இல் எமக்கும் யாழ் இந்துக் கல்லூரிக்குமிடையே முதல் அணி சம்பந்தமாய் ஏற்பட்ட பிரச்சினையிலே எமது உப அதிபர் நிர்வாகசபைக் கூட்டத்தில் பங்குபற்றியபின்னர் பாடசாலைக்கு மீண்டும் திரும்பி வரும் பொழுது என்ன நடந்தது என்பதை அறிவதற்கு மிக்க ஆவலுடன் பாடசாலை வாசலிலேயே காத்து நிற்பவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர்......*

முதன்மையானவர் சண்முகரத்தினம். 1979ஆம் ஆண்டினிலே நமது முதல் அணி கொழும்பு சென்று பிரபலமான கல்லூரிகளை எல்லாம் வீழ்த்தி Singer Shield வெற்றிக் கேடயத்தினைப் பெற்று ஊர் திரும்பியபொழுது காங்கேசந்துறை புகை வண்டி நிலையத்தில் இருந்து ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தினை முன்னின்று நடத்தியவரும் அவரே.எத்தனை உற்சாகம் காட்டினார்.அத்தனை வீரர்களையும் அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

1999 ஆம் ஆண்டினிலே கனடாவில் எமது பழையமாணவர் சங்கத்தினது கிளையினைத் தோற்றுவித்தோம். அன்று முதல் அதன் கலைவிழாக்கள், பூங்கா ஒன்று கூடல், இராப் போசன விருந்துகள், ஏனைய நிகழ்ச்சிகள் என அத்தனையிலும் அவர் நோய்வாய்ப் பட்டிருக்கும் வரை ஒன்று விடாமல் மிக ஈடுபாட்டுடன் நின்று அதன் வெற்றிக்காக ஒரு தொண்டனாக உழைத்தவர், மொன்றியாலில் ஆரம்பகாலத்தில் வசித்த சமயத்திலும் இங்கு வந்து பங்குபற்றியதுடன் சஞ்சிகை வெளியீட்டில் முதற் பிரதியையும் பெற்ற பெருமைக்குரியவர் திரு. சண்முகரத்தினம். பின்னர் ரொறன்ரோ வந்து குடியேறியதும் கூடிய அர்ப்பணிப்புடன் அவரால் முன்னிலும் கூடியதாக உழைக்க முடிந்தது.

எனக்கும் அவருக்கும் நெருக்கமான உறவினை ஏற்படுத்தியது இருவருக்கும் உள்ள தோட்டக்கலை ஆர்வம். சில சமயங்களிலே ஏதாயினும் செயற்கை உரம் வாங்கிப் பாவித்தால் அதனை எனக்கும் வாங்கிக் கொண்டு வந்து தருவார். அவரது இல்லம் எனக்கு அருகாமையில் இருந்தமையால் நடந்தே என் வீட்டினிற்கு வருவார். என்னிடம் ஏதாயினும் பூக் கன்று வகைகள் கூடுதலாக இருந்தால் கேட்டுப் பெற்றுச் செல்வார். தன்னிடம் உள்ளவற்றினையும் மற்றவர்களுக்கு கொடுக்க விரும்புவார்.

2003இல் ஒரு சமயம் அவர் கொழும்பு போகவிருந்தார். எனது தோட்டத்தில் ஏறக்குறைய ஆறு வேறுவேறான சூரியகாந்தி இனங்கள் இருந்தன. 'சேர் எனக்கு இந்த வகையின் விதைகள் யாவும் தேவை என்றார். எனது சகோதரர் கொழும்பில் ஒரு பெரிய வீடு வைத்திருக்கிறார். அவருக்கு இந்த வகைச் சூரியகாந்திச் செடிகள் பற்றித் தெரியுமோ தெரியதாது நான் கொண்டுபோய் அறிமுகப் படுத்தப் போகிறேன்' என்றார். கொடுத்தேன். எடுத்துப் போனார்.

தனது வீட்டினையும் அழகாக வைப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். பெரிய பெரிய பொம்மைகள் , வேறு வேறு இனத் தாவரங்கள் எல்லாம் அவரது வீட்டு இருப்பிடங்களை அழகு செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர்......*

2006இல் அவரது மூத்த மகன் அகாலமடைந்தது அவரைப் பெரிதும் பாதித்தது. அந்தத் துயரை ஓரளவாவது மறக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தனது ஒன்றுவிட்ட சகோதரர்களோடு சிறிது காலம் வாழ நினைத்து இங்கிலாந்து சென்றார் அங்கேதான் முதன்முதல் காலன் அவர்மேல் கைவைக்கப் பார்த்தான். ஆனால் அவன் ஜம்பம் அம்முறை பலிக்கவில்லை. காலால் உதைத்து விட்டு வீடு திரும்பிவிட்டார். அதே கலகலப்புடன் நம்மிடையே உறவாடியபடி வலம் வந்தார்.
2008இல் ஒருநாள் திரு. முத்துலிங்கம் தொலைபேசியில் அழைத்து திரு சண்முகரத்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுளார். நிலமை சற்று மோசமாயுள்ளது என்றார். நானும் திரு சாந்திநாதனும் சென்றோம். நிலமை மோசமாகத் தான் இருந்தது. மனைவியும் மகனும கவலை தோய நின்றனர். நான் யாரெனக் கூறினாரகள். முழித்துப் பார்த்தார். ஆனால் புரிந்து கொண்டாரோ தெரியவில்லை. மீண்டு முன்போல வீடு வருவாரா என்ற சந்தேகத்துடனேயே வீடு வந்தேன்.

நாட்கள் சென்றன. ஒரு நாள் காலை எனது தொலை பேசி அழைத்தது. எடுத்தேன் 'நான் சண்முகரத்தினம் பேசுகிறேன் சேர்' என்றார். அதே குரல். அதே பரவசமான பேச்சு. 'எங்கிருந்து பேசுகிறீர்' என்றேன். 'நான் வீட்டில் இருக்கிறேன் சேர்' என்றார். எனக்கோ ஆச்சரியமான ஆச்சரியம். காலனை இரண்டாம் முறையும் உதைத்து விட்டாரே என எண்ணினேன். திரு துரைசிங்கத்தினை அழைத்துச் சொன்னேன் அவரும் ஆச்சரியப் பட்டார். இருவருமாக அவரைப் பார்க்கச் சென்றோம். அதே அட்டகாசமான வரவேற்பு. அதே பேச்சு முறை. நெருக்கம். சந்தோசமாயிருந்தது. சிறிது நேரம் கதை பேசிய பின்னர் வீடேகினோம் ஆனால் வீடு வரும் வரை அவர் பற்றிய கதையிலேயே மூழ்கியிருந்தோம்.

2010ஜூன் மாதத்தில் நான் செம்மொழி மகாநாட்டிற்காகத் தமிழகம் சென்றிருந்தேன். மகாநாடு முடிந்ததும் மகாஜனாவின் நூற்றாண்டு கலைவிழாவினில் பங்கு பற்றுதற்காக உடனடியாக வீடு திரும்பினேன். கலைவிழா நடந்த இரண்டு நாட்களும் திரு சண்முகரத்தினத்தினை என்னால் காண முடியவில்லை. இது வியப்பாக இருந்தது. ஏன் அவர் வரவில்லை என விசாரித்தேன். முன்னைப் போல இல்லை கொஞ்சம் உடல் நலக்குறைவு என்றார்கள். இத்தனை மோசமாக இருக்கும் என நான் கனவிலும் கருதவில்லை. அசட்டையாக இருந்து விட்டேன்.

அடுத்த சில நாட்களில் செய்தி வந்தது, அவர் அமரராகிவிட்டார் என்று. திகைத்தேன்.

சண்முகரத்தினம் என்றஅந்த நல்ல மனிதர் நம்மிடையே வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர்......*

நற்பண்பு எனும் காந்தம் மூலம் எம்மை ஈர்த்தார். அன்பெனும் பாசத்தால் எம்மைக் கட்டி அணைத்தார். அருள் எனும் உணர்வால் எம்முடன் கலந்தார். காலன் எனும் மாமூலனால் எம்மை விட்டுப் பிரிந்தார்.

ஆனால் அவர் நினைவுகளை என்றுமே எவராலும் நீக்க முடியாமல் பதித்துவிட்டே அவர் சென்றார்.

அவர் நினைவுகள் என்றுமே நீங்காதவை,
எம் உள்ளதை நிறைப்பவை.

******************

# பிரான்ஸ் மருமக்களின் கண்ணீர் அஞ்சலி

மாமா என்று செல்லமாய் அழைத்த
மருமக்கள் புலம்புகின்றோம்
இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் பிரிவீர்கள் என்று
சிறிதளவு கூட சிந்தித்துப் பார்க்கவில்லை.
பலகாலம் சென்றபின்பு பாசமழை பொழிவதற்கு
மூன்றுதடவை பிரான்ஸ் வந்து எங்களுடன் அன்பாகப்
பேசி எங்களை ஆட்கொண்ட மாமாவே!
காலன் பறித்தானோ கலங்குகின்றோம் நாங்கள்
எப்பொழுது காண்போம் இனி எங்கள் மாமாவை
இன்னொரு பிறப்பு இருந்தால் இணைந்து இருப்போம்
மாமாவே ஏங்கித் தவிக்கிறோம். ஏன் இந்தச் சோதனை.
நிலையான நினைவோடும், கலையாத கனவோடும்,
கண்ணீரும் வழிந்தோட, கதியின்றி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION**
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
**United Kingdom** ஐக்கிய இராச்சியம்
E-Mail: info@mahajana.com

அநுதாபச்செய்தி

# திரு கி சண்முகரத்தினம் அவர்கள்

தெல்லிப்பழை – அம்பனையைப் பிறப்பிடமாகவும் இறுதிக்காலத்தில் கனடாவைத் தனது வதிவிடமாகவும் கொண்ட திரு கிருஷ்ணர் சண்முகரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

எமது கல்லூரியின் அருகிலேயே பிறந்த அமரர் சண்முகரத்தினம் நீண்டகாலம கல்லூரியுடன் பல்வேறு தொடர்புகளைக் கொண்டவராகத் திகழ்ந்தவர். எமது கல்லூரியின் பழைய மாணவர். கல்லூரி தனது பல தேவைகளுக்காகப் பயன்படுத்திய வாகனங்களின் சொந்தக்காரரான காலம்சென்ற திரு அம்பலவி கிருஷ்ணரின் மூத்த மகன். பின்னாளில் நாட்டுச் சூழ்நிலைகளால் புலம்பெயரும்வரை இவரே கல்லூரி பயன்படுத்திய வாகனங்களின் சொந்தக்காரர்.

மகாஜனக் கல்லூரி பெற்ற வெற்றிகளின் போதெல்லாம் வீரர்களையும் மாணவர்களையும் அந்தத தேவைகளிற்கெல்லாம் தனது வாகனங்களில் ஏற்றிச் சென்றதன் காரணமாக அவர்களின் அன்பிற்குப் பாத்திரமானவர். அவரின் மூத்த மகன், காலம்சென்ற மோகன் எமது பழைய மாணவர். சகோதரர்கள் மங்களம், ஜெகதீசன், சறோஜினி ஆகியோரும் எமது பழைய மாணவரே. கனடாவில் எமது பழைய மாணவர் சங்கத்தின் ஊக்கமான உறுப்பினராகவும் நிருவாகசபை உறுப்பினராகவும் கடமையாற்றியவர்.

அமரர் சண்முகரத்தினம் அவர்களின் மறைவினால் துயருறுகின்ற அனைவருக்கும், குறிப்பாக அவரின் மனைவி, மகன், சகோதரர்கள் ஆகியோருக்கு எமது சங்கத்தின் சார்பிலும், மகாஜனக் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

சி கணேசலிங்கம்
செயலாளர்
20 - 08 – 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Late Mr. Shanmugaratnam in the lives of Mahajanans

***. Nantheeswarar,***
***Patron, Mahajana College OSA - Canada***

The sad news about the death of Shanmugaratnam Krishnar came as a shock to me. I have known him and his family since my childhood. Mr. Shanmugaratnam was known to everyone in Tellippalai as "Kili Anna". Mr. Shanmugaratnam was devoted to his wife and children. His brother Esan and I are friends for a long time. My father had asthma during my younger days and I used to hire his car to take my father to the hospital. I would even go and wake Shanmugaratnam in the middle of the night and he helped us without any hesitation. He was such a wonderful person.

The late Mr. Krishnar Ampalavi and Shanmugaratnam Krishnar have won the hearts of Mahajanans by working tirelessly with our college towards fostering sports, culture especially in soccer, cricket and athletes. He and his father Krishnar always took our athletes to soccer, cricket & hockey matches as well as JSSA athletic sports meets. Hence, one of Mr. Shanmugaratnam's dedicated contributions towards Mahajana will be his lasting legacy in all of our memories as being the anna of our sportsmen.

It is hard to find an athlete in Mahajana College that he did not help or touch in some way or another. He was respected and admired by everyone from Principals, teachers to students and support staff. His untimely departure from us is very hard to fill. Hope his wife and son are comforted somewhat by the fact that their grief and bereavement is shared also by thousands of Mahjanans around the globe. We salute and reflect on the many happy memories of Mr. Shanmugaratnam known as "Kili Anna" for his commitment and devotion to Mahajana College's sports and development.

After his eldest son passed away he became very sick. He was admitted in the hospital several times, and when he recovered from his illness he made a visit to Sri Lanka and the United Kingdom to see his brother, sisters and relatives. Then once again he became ill and was in the hospital for the last four months. I would like to take this opportunity to express our deepest sympathy and condolences to his wife and son for their great loss.

The almighty god had called him to rest permanently in peace as he had suffered for a long period with his illness.

***May his soul rest in peace. Aum Shanthi, Shanthi, Shanthi.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The "Guardian Angel" of the Mahajana Sports Teams

***M. KARTHIGESU***
***Patron, Mahajana OSA, Canada***

It is indeed a great honor and privilege for us, Mahajanans, in Canada to pay our homage to the late Mr.K.Shanmugaratnam. His devotion to his Alma mater along with his services to the Sports teams of Mahajana is the legacy he has left behind for us to cherish and remember him forever. In his very young age, he joined his late father, Mr. Krishnar in his business of providing transport for the students mainly of Vali North, Jaffna, to and from their homes to the various colleges and schools in the area. Like his popular father who was held in high esteem by the students and the members of the public,

Shanmugaratnam endeared himself to everyone by his amiable ways and pleasing manners. Soon, he came to be popularly addressed as " Kili Anna", especially by the Mahajanans.He accomplished with distinction the task of transporting and inspiring the members of the Mahajana Sports teams - Cricket, Soccer, Hockey, Net-ball, Athletics etc. to various destinations of competitions in Jaffna. For him, their safe return back home with success in the competitions had been always of paramount importance. He cheered them during their matches ; he revelled in their success ; and on occasions of set-backs, he soothed their feelings of disappointment with his words of wisdom and encouragement. To put it briefly and succinctly, during his professional life in and around Mahajana, he assumed the role of the "Guardian Angel" of the Mahajana Sports Teams.

From the time of his arrival in Toronto, Shanmugaratnam, became a active member of the Mahajana O.S A. Canada. He played a vital role in all the activities of the Association. He stood shoulder to shoulder with the members of the Ex. Co of the M.C.O.S.A in accomplishing all the tasks that were assigned to him.

Always ebullient and energetic, he led a life exemplary sevice to Mahajana. Posterity will always sing his praise as a worthy son of Mahajana.

May I quote these lines from Bagavad Gita to bring some measure of solace and peace of mind to his beloved wife and her children.

*Body is destructible ; but not its Eternal Soul –*
*the Athman-the Spark of Divinity in our Soul -*
*it is deathless ; it is Divine"*
*We pray His Soul remains in Eternal Peace forever !*
*OM SHANTHI ! OM SHANTHI ! OM SHANTHI!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புமிக்க கிளியண்ணா!

தம்பி சந்திரன் -கனடா

நீங்கள் அன்போடும் பண்போடும் பேசும் பேச்சுக்கள் எம் இதயத்தில் வீழ்ந்து நினைவலைகளாக வருடிக்கொண்டு இருக்கின்றது.

"அன்பின் வளியது உயிர்நிலை" கிளியண்ணா! நீங்கள் இறக்கவில்லை. உடலைத் துறந்து இருக்கின்றீர்கள்.அன்புள்ளவர்களின் இதயத்தில் அமர்ந்து இருக்கின்றீர்கள். ஆண்டவன் அளவையில் அமர்ந்து இருக்கின்றீர்கள்.

நீங்கள் பெற்றுக் கொண்ட "சிவபதவி" எல்லோருக்கும் கிடைக்கின்ற பதவி. உயர் பதவி. விரும்பிக் கேட்காத பதவி. போட்டியில்லாத பதவி. ஏன் அண்ணா அவசரப்பட்டுப் பெற்றுக்கொண்டர்கள்.

ஆன்மா உடலோடு இருந்த போது "காலம் பிரித்தது" மனைவி பிள்ளைகளைப் பிரிய நேர்ந்தது. வீட்டைப் பிரிந்தார். நாட்டைப் பிரிந்து கடல்வடந்து வந்து விரிவுத் துயரில் வாழ்ந்த காலங்களை நான் நன்கு அறிவேன். இவர் ஒன்று சேர்ந்த காலத்தில் காலன் அன்புமிக்க முத்த மகனை நிரந்தரமாகப் பிரித்தான். ஆண்ணரும் நிரந்திரமாகப் பிரிந்து சென்று விட்டார்.

திருமந்திரம் சொல்கின்றது – ஆன்மா உடலைவிட்டுப் பிரியும்போது கவலை கொள்ளாது ஆனந்தப்படும். 'அழிந்தேன் உறவு எனும் பாசம் களிந்தேன் அழிந்தாங்கினியோர் ஆக்கமும் வேண்டேன். சிவனுடன் சேர்ந்து விட்டேன்' என.

எது எப்படியோ. இவருடைய ஆன்மா சர்வ வல்லமையுடைய இறைவன் அவையில் நித்திய இளைப்பாறுதலைப் பெறவேண்டுமென வேண்டுவோம்.

"அறக்காற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்
புறக்காற்றில் போய் பெறுவது எவள;"

கிளியண்ணரின் ஆத்மா சாந்தியடையட்டும்
ஓம் சாந்தி ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What happened on this day...March 18th

**1940:** Adolf Hitler and Benito Mussolini meet at the Brenner Pass in the Alps and agree to form an alliance against France and the United Kingdom.

**1945:** Maurice "Rocket" Richard becomes the 1st NHLer to score 50 goals

**1946:** Diplomatic relations between Switzerland and the Soviet Union are established

**1948:** France & Great Britain & Benelux sign Treaty of Brussels

**1948:** Philips begin experimental TV broadcasting

**1952:** 1st plastic lens for cataract patients fitted (Philadelphia)

**1961:** Poppin' Fresh Pillsbury Dough Boy introduced

**1963:** France performs underground nuclear test at Ecker Algeria

**1965:** Cosmonaut Aleksei Leonov, leaving his spacecraft Voskhod 2 for 12 minutes, becomes the first person to walk in space.

**1965:** Rolling Stones fined £5 each for public urination

**1966:** Scott Paper begins selling paper dresses for $1

**1967:** Beatles' "Penny Lane" single goes #1

**1970:** NFL selects Wilson as official football & scoreboard as official time

**1974:** Most Arab oil producing nations end embargo against US

**1977:** US restricts citizens from visiting Cuba, Vietnam, N Korea & Cambodia

**1981:** Buffalo Sabres sets NHL record of 9 goals in 1 period (vs Toronto)

**1986:** Treasury Department announces plans to alter paper money

**1987:** Gerber survey find most popular names for newborns (Jessica & Matthew)

**1989:** In Egypt, a 4,400-year-old mummy is found in the Pyramid of Cheops.

**1989:** 27th space shuttle mission, STS-29 (Discovery 8), returns to Earth

**1990:** Largest Art robbery in the history (Isabella Stewart Gardner Museum in Boston), where 12 paintings valued at $100 million are stolen

**1991:** Apple computer head Steve Jobs weds Laurene Powell

**1992:** Zimbabwe beat England by 9 runs in World Cup at Albury



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *What happened .........*

**1993:** Amsterdam stock exchange hits record ƒ12.2 billion
**1993:** Sri Lanka beat England in Test match by 5 wickets
**1994:** South Africa Goldstone committee reveals existence of secret police
**1995:** Michael Jordan announces he is ending his 17 month NBA retirement
**1996:** 50,000 swimmers raise 15 million for charity during BT's Swimathon '96
**2003:** FBI agents raid the corporate headquarters of HealthSouth Corporation in Birmingham, Alabama on suspicion of massive corporate fraud led by the company's top executives.
**2003:** British Sign Language is recognized as an official British language.

## March 18th Birthdays...

**1548:** Cornelis Ketel, Dutch portrait painter and poet
**1657:** Giuseppe Ottavio Pitoni, Italian composer
**1765:** David H Chasse, Dutch baron/general, fought Napoleon at Waterloo
**1813:** Friedrich Hebbel, writer
**1858:** Rudolf Diesel, German engineer, Diesel motor
**1877:** Clem Hill, cricketer, all-time great Australian batsman
**1899:** Lavrenti Beria, chief of Soviet secret police under Stalin
**1901:** Manly Hall, Canadian Philosopher
**1927:** John Harold Kander, composer, Cabaret, Funny Lady, Kramer vs. Kramer
**1936:** Tony Nash, born in England, bobsled, 1964 Olympics gold
**1946:** Michael Reagan, talk show host, Ronald's son
**1956:** "The Model" Rick Martel, Richard Vignault, wrestler, WWF/AWA
**1963:** Vanessa L. Williams, born in Millwood, New York, 1st black Miss America 1983 and singer
**1970:** Queen Latifah, rap singer and actress, Khadijah James-Living Single
**1977:** Devin Lima- Member of pop group LFO recorded "Summer Girls" (1999)
**1979:** Adam Levine- Singer/ Guitarist for Maroon 5

***THAS***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Goodbye uncle!

***Karthik and Reshi***

I was 10, and all I remember was a man, with a crooked nose and a bushy moustache, he came and asked me weather I wanted to go out with him for the day.

This man was my uncle, and this was my first memory of him! And to his answer I said yes!

It was mid summer in England, and my uncle took me to a scrap yard, I asked what we were doing here and he replied, I need to get some parts for my car.

It took 3 hours of careful observation and arguments with the merchant debating prices, and then we finally got the parts.

When we left the scrap yard, he was not carrying any bags, and there in the palm of his hand I saw two tiny car light bulbs.

This was my first memory of my uncle. My uncle accomplished what only few men ever do. He was a man who embraced his passion in life.

We will miss you ever so deeply. I hope you're at peace now. When I look up at the sky, I will think of you driving into the sunset, in the car of your dreams, with our beloved Thas by your side.

***Goodbye uncle! X***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்த நன்றிகள்

எங்கள் குடும்பத் தலைவர் திரு சண்முகரத்தினம்
அவர்கள் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில்
அனுமதிக்கப்பட்டு இருந்த வேளையிலும்,
அவரின் இறுதிக் கிரியைகளின் போதும்
அந்தியேட்டி நிகழ்வுகளின் போதும்




சமூகமளித்து அஞ்சலி செலுத்திய
மலர்வளையங்கள் வைத்த
உரையாற்றிய
உதவிய
அநுதாபச்செய்திகள் தந்த

அனைத்து நல்ல உள்ளங்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்

மனைவி குலமணி
மகன் சுரேன்
இவர்களுடன்
சகோதரர்களும்
உறவினர்களும்
22-08-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kiliannai and his friend Dr Sivagnanavel



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



RARE GLIMPSE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org